## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

### முதலாம் வருட இரண்டாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு 2010/2011 (ஜனவரி / பெப்ரவரி -2013)

# CC 1203 MANAGEMENT AND ENTREPRENEURSHIP

10 JUN 2013
EASTERN ... LANKA

ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

நேரம் - 2 மணித்தியாலங்கள்

---

01. a) "முகாமையாளர்கள் பல்வேறு தடைகள் அல்லது பிரச்சினைகளை வெற்றிகொள்வதன் மூலம் நிறுவனத்தின் இலக்கினை அடைந்து கொள்ளமுடியும்". முகாமையாளர் ஒருவர் எதிர்நோக்கும் ஐந்து (05) முக்கிய தடைகளை குறித்து ஆராய்க.

(15 புள்ளிகள்)

b) "வெவ்வேறு மட்டங்களைச் சேர்ந்த முகாமையாளர்களுக்கு வேண்டப்படும் தேர்ச்சித் திறன்களின் அளவானது வேறுபடுகின்றது". இக்கூற்றை விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

02. a) வணிகச் சூழல் என்றால் என்ன? அதன் வகைகளில் ஏதேனும் ஒன்றினைக் குறித்து விளக்குக.

(15 புள்ளிகள்)

b) "நிறுவனமொன்றின் சூழல் காரணிகள் ஒரு நிறுவனத்திற்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமையலாம். இதனை ஆய்வு செய்ய SWOT ஆய்வானது பாரிய பங்கு வகிக்கின்றது". இக் கூற்றினை உதாரணத்துடன் ஆராய்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

03. a) ஹென்றி பயோலின் முகாமைத்துவம் தொடர்பான பதினான்கு தத்துவங்களில் ஏதேனும் ஐந்து (05) தத்துவங்களைக் குறித்து விளக்குக.

(15 புள்ளிகள்)

b) "ஒரு நிறுவன அமைப்பிலோ அல்லது முகாமைத்துவ முறையிலோ கோட்பாடுகள் தங்கியிருக்கவில்லை. அவை பலதரப்பட்ட மாறிகளில் தங்கியுள்ளது" என விளக்கும் கோட்பாட்டினைக் குறித்து ஆராய்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

04. a) திட்டமிடல் என்றால் என்ன எனக் குறிப்பிடுவதோடு, திட்டமிட
முக்கியத்துவத்தையும் குறித்து ஆராய்க.

(15 புள்ளிக

b) "சிறந்த திட்டமிடல் சில பண்புகளைக் கொண்டிருத்தல் அவசியமானதாகு
அத்தகைய பண்புகளைக் குறித்து விளக்குக.

(10 புள்ளிக

(மொத்தம் 25 புள்ளிக

05. a) "நிறுவனம் ஒன்றில் ஒழுங்கமைத்தலை மேற்கொள்ளும் போது பல்வேறு தத்துவங்
கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்". அவ்வாறான ஒழுங்கமைத்தல் தத்துவத்துவங்கை
விளக்குக.

(15 புள்ளிக

b) சிறந்த தலைவர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய வலுக்களை (Power) அடையா
கண்டு விளக்குக.

(10 புள்ளிக

(மொத்தம் 25 புள்ளிக

06. a) முயற்சியாண்மை எனும் பதத்தை வரையறுத்து, ஒரு வெற்றிகரமான முயற்சியாளரு
இருக்க வேண்டிய தகைமைகளை குறித்து விளக்குக.

(15 புள்ளிக

b) ஒரு முயற்சியாளர் எதிர்நோக்கும் ஏதேனும் ஐந்து (05) வகையான தடைக
குறிப்பிட்டு அதற்கான பரிந்துரைகளையும் விளக்குக.

(10 புள்ளிக

(மொத்தம் 25 புள்ளிக